உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 **May 1942** **No. 5**

விஷய சூசிகை.

	பக்கம்
மதுரை சுதேச வைத்திய ஸபா விதிகள்	1—3
வைத்தியம் (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)	4—9
ஹிருதயரோகங்கள் (பத்திராதிபர்)	9-12
பலவகை ௸	37-44
ஔஷதசாரம் ௸	100-103
வைத்தியக்குறிப்புகள்	13

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள்நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
„ „ ½-க்கு ரூ 4
„ „ ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No. 2, Police Station West Lane, Madura.

காபிரைட்] [விலை **0—3—0**,

குறிப்பு.

1. சந்திரிகையில் வெளியிடும்படி நமக்கு வரும் வியாசங்கள் காலதாமதமின்றி உடனுக்குடன் வெளியிடப்படும். அவ்விதம் வெளிவராத வியாசங்கள் நமக்குக் கிடைக்கவில்லை யென்றே நிரூபர்கள் கருதவேண்டும். பத்திரிகைக்கு வியாசம் எழுதுவதில் நமது வைத்தியர்களுக்குப் பொதுவாக ஓர் அச்சம் இருப்பதை கவனிக்கிறோம். ஆகவே அபூர்வமாக நமக்குக் கிடைக்கும் வியாசங்களைத் தாமதமின்றி உடனேயே வெளியிடவேண்டுமென்பது நமது நோக்கம். ஆகவே வெளிவராத வியாசங்கள் ஏதோ காரணத்தால் நம் கைக்குக் கிடைக்கவில்லையென்று கருதவேண்டும். நாம் அறிந்த காரணம் ஒன்றைக்குறிப்பிடுகிறோம். அதாவது வியாசம் அனுப்புபவர்கள் கடிதத்தின் எடையைக் கவனித்து தபால்தலை ஒட்டாமல் குறைத்து ஒட்டி விடுவதால் அது நமக்குவரும்பொழுது குறைவு தொகையைக் கட்டிப் பெற்றுக்கொள்ள நேரிடுகின்றது. அந்தக்கடிதங்களை நாம் பெற்றுக்கொள்ளாமல் வாபஸ் செய்து வருவதால் அதைப்பற்றிய தகவல் நமக்குத் தெரியாமல் போகின்றது. ஆகவே தயவுசெய்து தபால் தலைகளைக் குறைவின்றி ஒட்டிச் சரிபார்த்து கடிதங்களை அனுப்பும்படி வேண்டுகிறோம்.

2. நண்பர்கள் சில குறிப்பிட்ட மருந்துகளின் முறைகளையறியவிரும்பி நமக்குக் கடிதம் எழுதுகின்றனர். அவர்களுக்குத் தனியாகக் கடிதமூலம் விவரங்களை எழுதியனுப்புவது கடினமென்று கருதி அம்முறைகளைச் சந்திரிகை மூலமாகவே இதுவரையில் வெளியிட்டு வருகிறோம். இம்முறைகளை "பலவகை" என்ற தலைப்பில் வெளியிடுகிறோம். ஆகவே நண்பர்கள் தாங்கள் விரும்பும் முறைகளை ஷை தலைப்பில் கவனித்துக் கொள்ளும்படி வேண்டுகிறோம். தவிர சிலர் நூல்களைக் குறிக்காமல் முறைகளை எழுதுகின்றனர். நூல்களைக் குறிப்பிட முடியுமாகில் குறிப்பிட்டு வேண்டும் முறைகளின் பெயரை எழுதினால் அது மிகவும் சௌகரியமாக இருக்கும்.

3. சென்ற சில வருஷங்களாக சந்திரிகையில் வெளிவராமலிருந்த "ஔஷதசாரம்" என்ற பாகத்தை இப்பொழுது சந்திரிகையில் வெளியிடுகிறோம்

பத்திராதிபர்.

மதுரை, சுதேச வைத்திய ஸபா.

1. ஸபையின் பெயர்—"மதுரை சுதேச வைத்திய ஸபா" என்பதாகும். (2) ஸபையின் நோக்கங்களாவன—மதுரையிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் சுதேச வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்தல், சுதேச வைத்தியர்களுள் ஒற்றுமையை வளர்த்தல், பல இடங்களிலும் கிளைகளை ஸ்தாபித்தல், மாதாந்தக் கூட்டங்கள், பத்திரிகைகள், முதலியவை மூலமாகச் சுதேச வைத்தியக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தல், சுதேச வைத்தியர்களின் நன்மையைக் கவனித்தல், சுதேச வைத்திய நிபுணர்களுக்கு யோக்யதா பத்திரம் அளித்தல், ஆகியவைகளாம்.

மதுரை, சுதேச வைத்திய சபையின் விதிகள்.

1. இச்சபையின் அங்கத்தினர்கள்—வைத்தியத் தொழில் செய்து வரும் ஆண் மக்கள் அல்லது பெண் மக்களும் இச்சபையின் நோக்கங்களில் அபிமானம் கொண்டு ஆதரிப்பவர்களும், இச்சபையின் அங்கத்தினர் ஆவார்கள். ௸ அங்கத்தினர் இரு வகைப்படும். வருஷத்திற்கு இரண்டு ரூபாய் சந்தாத்தொகையைச் சபைக்குச் செலுத்துபவர்கள் விசேஷ அங்கத்தினர் என்றும், வருஷத்திற்கு ஒரு ரூபாய் சந்தா செலுத்துபவர் சாதாரண அங்கத்தினர் என்றும், இரு வகைப்படும். (2) விசேஷ அங்கத்தினர்கள் தங்கள் சந்தாத்தொகையை இரண்டு தவணைகளில் செலுத்தலாம்.

நிர்வாகக் கமிட்டி.

3. நிர்வாகக் கமிட்டியென்பது சபையின் நோக்கங்களையும் காரியங்களையும் கவனித்து நடத்த ஒரு தலைவர், ஒரு காரியதரிசி, மற்றும் மூன்று மெம்பர், ஆகமொத்தம் ஐந்து மெம்பர்களடங்கியதாகும். சபையின் விசேஷ அங்கத்தினர்களைக் கொண்டு ௸ நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட வேண்டும். (4) பிரதி ஆங்கில வருஷம் ஜனவரி மாதத்தில் ஸபை மெம்பர்கள் (ஜனரல்பாடி) ஸபையின் நிர்வாகக் கமிட்டி மெம்பர்களைப் புதிதாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவ்விதம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவ்வருஷம் முழுவதும் ஸபையின் நிர்வாகத்தை நடத்தவேண்டும். அவ்விதம் ஜனவரி மாதத்தில் ஜனரல்பாடி மீட்டிங் கூட்டமுடியாத பக்ஷத்தில் புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும் வரை பழைய கமிட்டியே

நிர்வாகம் நடத்தி வரவேண்டும். (5) நிர்வாகக் கமிட்டியில் எக்காரணத்தாலாவது காலிஸ்தானம் நேர்ந்தால் அத்தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் ஜனரல்பாடி கூட்டி நிர்வாக மெம்பரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவ்விதம் தேர்ந்தெடுக்கப்படுபவர் புதிய நிர்வாகக் கமிட்டி அமைக்கப்படும் வரை அதில் ஸ்தானம் வகிப்பார் (6) ஸபையின் காரியங்களை கவனிக்க மாதம் ஒரு முறையாவது நிர்வாகக்கமிட்டி கூட்டம் சபையின் காரியதரிசியால் கூட்டப்படும் (7) நிர்வாகக்கமிட்டி கூட்டத்தில் குறைந்தது மூன்று மெம்பர்களாவது ஆஜராக விருந்தால்தான் கோரம் உண்டு. (8) நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடுவதற்குக் குறைந்த பக்ஷம் மூன்று நாட்களுக்கு முன்பே ஷை மெம்பர்களுக்கு அறிக்கை கொடுக்கவேண்டும். இடம், தேதி, காலம், ஆலோசனைக்கு வரும் விஷயங்கள் ஆகிய இவை அவ்வறிக்கையில் விவரமாக இருக்க வேண்டும். (9) நிர்வாகக் கமிட்டி கூட்டங்களில் சபைத்தலைவராவது அவர் இல்லாத காலத்தில் நிர்வாகக் கமிட்டியின் மற்ற அங்கத்தினராவது தலைமை வகிக்கவேண்டும். (10) ஷை கமிட்டியில் காரியதரிசியால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படி முடிவு செய்யப்படும். (11 தகுந்த பண்டிதர்களுக்கு மெடல் அல்லது சர்டிபிகேட் அளிக்க நிர்வாகக் கமிட்டிக்கு உரிமை உண்டு. (12) நிர்வாகக்கமிட்டி கூட்ட முடியாத காலங்களில் சர்குலேஷன் மூலமாக மெம்பர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படி சபையின் காரியங்களை காரியதரிசி செய்யலாம்.

மகாசபை. (ஜெனரல்பாடி.)

13. சபையின் ஜனரல்பாடி மீட்டிங்குகளில் சபைத்தலைவர் அக்கிராஸனம் வகிப்பார். அவரில்லாத காலங்களில் சபை மெம்பர்களில் யாராவது அக்கிராஸனம் வகிக்கவேண்டும். (14) ஜனரல்பாடி மீட்டிங்கில் தீர்மானங்கள் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படி முடிவு செய்யப்படும். (15) ஜனரல்பாடி மீட்டிங்குகளில் பத்து மெம்பர்களுக்குக் குறைவின்றி ஆஜராக விருந்தால் கோரமுண்டு. (16) ஷை கூட்டங்களுக்கு ஐந்து நாட்களுக்கு முந்தியே மெம்பர்களுக்கு அறிக்கை கொடுக்கவேண்டும். இடம், காலம்,

தேதி, ஆலோசனைக்கு வரும் விஷயங்கள் ஆகிய இவை அவ்வறிக்கையில் குறிப்பிடப்படவேண்டும். (17) சபையின் விதிகளைத் திருத்தவும் அல்லது புதிப்பிக்கவும் ஜனரல்பாடிக்குத் தான் அதிகாரம் உண்டு.

சபை காரியதரிசியின் அலுவல்கள்.

18. நிர்வாகக்கமிட்டிக கூட்டம், ஜனரல்பாடிக் கூட்டம், மற்றப் பொதுக்கூட்டம் (ஸம்மேளனம்) ஆகிய இவைகளை உசிதம் போலக் கூட்டுதல், மெம்பர்களிடம் சந்தா வசூலித்தல், மற்றவர்களிடம் பொருள் உதவி பெறுதல், ஷை தொகைகளுக்கு ரசீது கொடுத்தல், ஆகிய இவை காரியதரிசியைச் சேர்ந்தவையாகும். (19) ஒவ்வொரு மாதமும் ஒரு ரூபாய் வரை சபையின் சிலவுகளைக் காரியதரிசியேசெய்யலாம். ஒவ்வொரு மாதமும் இரண்டு ரூபாய் வரை சிலவுகளை நிர்வாகக் கமிட்டியாரின் முன் அனுமதி பெற்றும் அதற்குமேற்பட்ட சிலவுகளை ஜனரல்பாடியின் முன் அனுமதி பெற்றும்காரியதரிசி சிலவுகளைத் தகுந்த ரசீதைப் பெற்றுக்கொண்டு செய்யவேண்டும். (20) சபையின் சாமான்களும், ரிகார்டுகளும் தொகையும் காரியதரிசியிடம் இருக்கவேண்டும்.

பொதுவிஷயங்கள்.

21. நிர்வாகக் கமிட்டித் தீர்மானங்களும், ஜனரல்பாடி தீர்மானங்களும், மினிட் புக்கில் எழுதப்பட்டு அந்தந்த சபையில் அக்கிராஸனம் வகிப்பவரால் தேதியுடன் கையெழுத்திடப்பட வேண்டும். இவ்விதம் கையெழுத்திட்டு செய்யப்பட்ட தீர்மானங்கள் வேறு ருஜுவன்றியில் அந்தந்த சபையாரால் செய்யப்பட்ட முடிவாகக் கருதப்படும். (22) நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் அல்லது ஜனரல்பாடிக் கூட்டம் கூட்டவேண்டுமென்று சபையின் மெம்பர்கள் இருவர் கையெழுத்திட்டு எழுத்து மூலமாக வேண்டிக் கொண்டால் அத்தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் ஷை விருப்பப்படி கூட்டத்தைக் காரியதரிசி கூட்டவேண்டும். (23) சபையின் ஆதரவில் நடக்கும் பொதுக்கூட்டங்கள் (ஸம்மேளனங்கள்) ஆண்டு விழா, ஆகியவைகளில் சபையின் மெம்பர் அல்லது மற்ற வேறு கனவான் தலைமை வகிக்கலாம்.

வைத்தியம். (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)

மற்றும் சில வஸ்துக்கள் ரஸங்களையும் விபாகங்களையும் வீரியங்களையும் ஒட்டியல்லாது வேலை செய்து வருகின்றபடியால் அவ்விடத்தில் ப்ரபாவமென்றும் குணத்தினால் வேலை செய்வதாக இத்தன்மையும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. வைத்ய நூல்களை ஆராய்ந்து பார்ப்பின் இவைகளின் தத்வஞானம் ஏற்பட்டு விடும். வைத்யப் படிப்பிற்கு முக்கியமாகச் சரீரத்தின் பூர்ண அறிவைப் பெறவேண்டும். சரீரத்தின் உற்பத்தி முதல் (ஸந்தானோற்பத்தி காரணங்களுடன்) கர்ப்பகால விரிவுகள், கோளாறுகள், கர்ப்பத்தின் வெளிப்பிரவேசம், ஆகியவைகளும் சரீரத்தின் அமைப்புக்களும் உருவங்களும் செய்கைகளும் கொள்கைகளும் அறியப்படுவதுடன் எலும்புகள், ஸிரைகள், தமனிகள் ஸ்ரோதஸ்ஸுக்கள், ரஸாயனிகள், ஸ்நாயுக்கள், கண்டரைகள், நாடிகள், ஆசயங்கள், பேசிகள், அவயவங்கள், ஸந்திகள், மர்மங்கள் இவை முதலியவற்றின் ரூபங்கள், ஸ்தானங்கள், உபயோகங்கள் ஆகியவைகள் தனித்தனியாகப் பூர்ணமாக அறியப்படவேண்டும். இவ்விதம் அறிவுகளை அடைய சுச்ருத சரக நூல்களைப் பின்பற்றுதல வச்யமாகும். வைத்ய நூல்களை ஆராய்ந்து பார்ப்பின் திரிதோஷங்களையே ஆதாரமாய்க் கொண்டுள்ளதாய் அறியவரும். இதுகள் தான் சரீரத்திற்கும் வியாதிகளுக்கும் ஆரோக்யத்திற்கும் இன்றியமையாக் காரணங்களாய்க் காணப்படும். இம்மூன்றும் உலகம் முழுதிலும் நிறைந்துள்ளன. இதுகளின் ஒற்றுமை நன்மையாம் வேற்றுமை தீமையாம். இதுகளின் விரிவுகள் வகுத்தல்கள், ஸ்தானங்கள், குணங்கள், கெடுதல்கள், க்ஷயவிருத்திகள், பிணிகளுடன் சம்பந்தங்கள், காலதேச வஸ்துக்களுடன் ஸம்பந்தா ஸம்பந்தங்கள் முதலிய விரிவுகளைக் காணலாம். அறுசுவைகள் மூவ்விபாகங்கள் இரு வீரியங்கள் விபாகங்கள், இதுகளின் அமைப்புகள் அம்சங்கள் தொழில்கள் தன்மைகள் தோஷ சம்பந்தங்கள் வஸ்துக்களைப் பொறுத்து ஏற்றக்குறைவுகள் பிணிகளைப் பொறுத்துள்ள செய்கைகள் காலதேசானுசாரமுள்ள மாறுபாடுகள் முதலியன மனதைக் கலக்கச் செய்யும். முத்தோஷங்கள் ஏழு தாதுக்களை சந்தர்ப்பானுசாரம் கெடுக்கும் முறைகளும் முழு வரலாறுகளும்

கண்டறிய முடியாத தன்மையை. நிதானம், பூர்வரூபம், ரூபம் உபசயம், சம்ப்ராப்தி ஆகியவைகள் விவரிக்கப்பட்டுள்ளது கடினத் தோற்றமாகும். தோஷங்களின் சயம், ப்ரகோபம், ப்ரஸரம், ஸ்தானாந்தரகமனம், ரூபோற்பத்தி, சமனம், ஆகியவை அதிக மேதாவியின் மனதிற்கும் கூட எட்டா விஷயங்களாகும். ஆசாரியர் களின் உபதேசப்படி "தூஷ்யம் தேசம் பலம் காலமனலம் ப்ரகிருதிம்வய:" என்ற முழு விஷயங்களைக் கண்டு சிகிச்சை செய்வது ஆயிரத்திலொருவரால் சாத்தியமாகும். பரிஹார முறைகளைக் கவனிக்கும் கால் ஸந்தர்ப்பணம் அபதர்ப்பணமென்று இரு முறைகளினால் முடிவு கூறப்பட்டிருக்கிறது. மறுபடியும் பிரித்துப் பார்க்கும் கால், ஸ்நேகம், ஸ்வேதம், வமனம், விரேசனம், ஆஸ்தாபனம், அனுவாஸனம், ரக்தமோக்ஷணம், சிரோவிரேசனம், சஸ்திரவிதி, க்ஷாரவிதி, அக்னிவிதிகளும் ஒன்றொன்றின் அபார பிரிவுகளும் பார்த்தால் அணுவாக வாரம்பித்து மறுகரையில்லாச் சமுத்திரமாக முடிந்திருப்பதை நன்கு விளக்கிக் கொள்ள எவனால் தான் முடியும். பரிஹாரங்களுக்கு உபபலமாய் தனித்தனிப் பிணி களுக்கு நூற்றுக்கணக்கில் ஆஸவங்கள் அரிஷ்டங்கள் குவாதங்கள், பானங்கள் சொரஸங்கள், திராவகங்கள், சூர்ணங்கள், குளிகைகள், கிருதங்கள், தைலங்கள், லேகியங்கள், ஸிந்தூரங்கள், பஸ்மங்கள், லேபங்கள் கூறப்பட்டிருப்பதை ஸந்தர்ப்பானுசாரம் பிரயோகப் பந்திவிட அதிகச் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் கள். (ஒரு பிணிக்குப் பல மருந்துகளிருப்பது அதிக நன்மைக்கே) நாகரீக முறைகளைவிட அதிகப்படி பயனளிக்கும் தருந்த முறை களும் இதில் விரிவு படுத்தப்பட்டுள்ளன. இலக்ஷக்கணக்கில் வைத்ய நூல்கள் மூல ரூபத்திலும் வியாக்யான ரூபத்திலும் இயற்றப்பட்டிருப்பினும் மத்தியில் காலக்கெடுதலினால் பல முக்யங் கள் இங்கு காணக்கிடைக்காமல் போயிற்று. ஆயினும் பல மேனாட்டு நூல் நிலயங்களில் அலங்கார ரூபமாய் அதுகள் வைக்கப்பட்டிருப் பதாய் நாம் அறிகின்றோம். அவைகளை ஆதாரமாய் கொண்டு சில மேனாட்டு நூல் நிபுணர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை முடிவு கட்டியிருப்பதை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அன் றுடமும் அடிக்கடியும் அப்போதைக்கப்போதும் மாணிடர்கள் இதன் உபயோகத்தை நாடுகின்றனர். அதிக நன்மை யேற்பட

இவ்வழிதான் சிறந்ததென்று உணருகிறார்கள். வயதுக்குத் தக்கபடி ஔடதத்தின் உபயோக அளவுகள் சொல்லப்படாதில்லை. வெறும் வயிற்றில், ஆகாரத்திற்கு முன், ஆகார மத்தியில், ஆகாரத்தின் பின்னால், ஆகாரத்துள் பல தடவைகளில், அடிக்கடி, அன்னத்துடன் நிசியில் என்று இவ்விதம் மருந்துகளை சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி உட்கொள்ளக் காலமும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுள் அபிப்பிராய பேதங்களிருப்பதாய் வெளிப்படக் காணப்படினும் அந்தரப்பொருளைக் கவனிக்குங்கால் அபிப்பிராய வேற்றுமை கிடையாதெனத் தெரியவரும். இதற்குமுன் காண்பித்திருக்கும் ஆதாரங்களைத் தவிர இந்நூல்களுக்கு வேதஸாம்யதை யிருப்பதென்று "யஜ்ஜ: புருஷீயம்" "கியந்த: சிரஸீயம்" "நவேகாந்தாரணீயம்" முதலிய வைத்யவாக்யங்கள் தெளியவைக்கும் மேலுமாராயின் "ஆயுர்வேதோ நாமயதுபாங்க மதர்வவேதஸ்ய என்ற வாக்யப்படியும் அதர்வவேத மூலமாக விருக்கிறபடியால் இந்த வேதஸூக்தங்களில் நின்றும் இவ்வைத்யம் இதர வைத்ய கலைகளின் உற்பத்தி ஸ்தானமெனவும் விளங்குகிறது. உதாஹரணமாக "எவ்வஸ்துவின் ஹீனாதியோக மித்யாயோகங்களினால் எப்பிணியுண்டாகின்றதோ அதன் ஸஜாதீய வஸ்துக்களின் உபயோகத்தால் அப்பிணி விலகுகின்றது. எக்கீடாணுக்கள் ரோகஜனகங்களோ அவைகளின் உபயோகமே வியாதி நாசகமாகின்றது." என்று அதர்வணவேத ஸூக்தத்தில் காண்பித்திருப்பதால் சமசிகிச்சை (Homoeopathy) இதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. (Let likes be treated by likes) குறைந்த அளவில் அதிகசக்தியைக் கொடுக்கும் ஔடதோப யோகங்களும் "ஈசானாம் த்வாபேஷஜானாம்" "சக்ரே ஸஹஸ்ர வீர்யம்" என்றும் ஸூக்தத்தினின்றும் வெளிப்படுகின்றன. மேலும் திராவகங்களின் தயாரிப்பும் 100 × —1000 × முதலிய வீரியப்ரத நிர்மாணங்களும் காண்பிக்கப்பட்டிருப்பதும் ஸமசிகிச்சை யென்றும் காண்பித்திருப்பதும் ஆயுர்வேதப் பெருமைக்காகும். "நமஸ்தேஸ்து வித்யுதே நமஸ்தே ஸ்தனயித்னவே" என்பன போன்ற ஸூக்தங்களினின்றும் வித்யுத் (Electricity) வைத்ய விஷயத்தில் அதிக உபயோகமுடைய

தென்றும் இதன் உபயோகத்தால் உடனுடன் பல ப்ராப்தி யுண்டாகிறதென்றும் பூர்ணமாய் பிரஸ்தாபித்திருப்பதை இக்காட்களில் ஆராய்ச்சி பூர்வம் கண்டறிந்து Electropathy என்னும் நாமதேயத்தில் ஓர் வைத்தியக் கிளைப் பிரசுரப்பட்டிருப்பது ஆயுர் வேத ஸந்தானத்வேன ஒப்புக்கொள்ளப்படத் தயங்கத் தேவையில்லை. "அனுஸூர்ய முதயதாம் ஹ்ருத்யோதோ ஹரிமாசதே। கோரோஹிதஸ்ய வர்ணேந தேநத்வா பரிதத்மஸி பரித்வா லோஹிதைர்வர்ணை ர் தீர்க்காயுத்வாய் ததமஸி" இவை போன்ற சூக்தங்களில் ரவிகிரணங்களின் வெவ்வேறு நிறமுடையவைகள் வெவ்வேறு பிணிஹாரங்கள் என்று வெளிப்படுத்தியிருப்பதை ஆதுநிகர்கள் பரிசீலனை செய்து புலப்படுத்தி ஸதாகால உபயோக சௌகரியத்தை முன்னிட்டு வெவ்வேறுவர்ணஸீஸாக்களில் தண்ணீர் நிரப்பி வெய்யிலில் வைத்துப் பின்னால் குறிப்பிட்ட வியாதிகளை குறிப்பிட்ட ஸீஸா ஜலத்தினால் பரிஹரித்து வருகிறார்கள். இச்சிகிச்சையே Chromoeopathy ஆகும். இதன்மூலமும் ஆயுர்வேதமெனக் காண்பது அதிகப் பெருமைக்கன்றோ. மேலும் பார்ப்பின் மற்றவைகளும் இதன் பிறப்புகளென்று விளங்கும். பூதக்கண்ணாடியின் உதவியைக் கொண்டு இக்கால விஞ்ஞானிகள் தற்போது காணும் பல வாயு அணுக்கள் காலாந்தரத்தில் நெருப்பு ரூபங்களாகவும் பின் தண்ணீர் மயங்களாகவும் அதன் பின் மண்ணாகவும் மாறிவர விருக்கின்றன வென்றும் இதுகளைப் போல் பல மாறிவிட்டனவென்றும் பல மாறிவிடப் போகின்றன வென்றும் கண்டறிந்து சொல்லுகிறார்கள். திருஷ்டாந்தமாக தற்போதிருக்கும் சூரிய கோளம் முன்வாயவ்யமாக விருந்து பின் தைஜஸமாக விருப்பதென்றும் பின்னால் தண்ணீர் மண்ணுகளாய் மாறிவிடுமென்றும் விளக்கப்பெற்றுள்ளார்கள். மேலும் பார்ப்பின் நாம் வாஸம் செய்து வரும் இப்பூமி முன் நாளில் நெருப்பு கோளமாக விருந்து இயற்கையாக ஆகாயத்தில் சுற்றிக்கொண்டு வருகையில் சில அம்சங்கள் துண்டுபட்டு தனிப்பட்ட முறையில் ஆகாயத்தில் சுற்றிவரத் தொடங்குகையில் அத்துண்டுகள் சுக்ரன், குருமுதலிய வெவ்வேறு பெயர்களை அடைந்தனவென்றும் பின்னப்பட்ட ஷெ அம்சங்களினின்றும் மறுபடியும் சிதறிய கிளைகளையும் வெவ்வேறு

பெயர்களாலழைக்கலானதால் சூரியபுத்திரன், ஸோமபுத்திரன், பூ புத்திரன், என்றும் மற்றும்காரணநாமங்கள்வழங்கப்பெற்றுவருகின்றன. சிதறின பாகங்களை விளங்கி வானகோளம் காலாந்தரத்தில் பார்த்திவமாக மாறியிருப்பதாய் கூறுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு வஸ்துவும் ஆகாயத்தில் நின்றும் மாறி மாறிப் பரிணமமடைகிறதென்றே ஒப்புக்கொள்கிறார்களாயினும் ஆகாய மூலமான ஆன்மாவை ஒப்புக்கொள்ளுகிறார்களில்லை. ஸிருஷ்டி, ஸ்திதி, நாசம், என்ற உலகக் கொள்கைகள் இயற்கையாக நடந்தேறி வருகின்றனவென்று சொல்லலாம். இவ்வியற்கையே உலகத்தின் எல்லாக் கொள்கைகளையும் மேல் நடத்துவதாகும். மானிட திரேகக் கொள்கைகளை நடத்துவது மிதுவாகும். ஆயினும் இது கண்களுக்கோ இதர இந்திரியங்களுக்கோ புலப்படாது. இருப்பினும் திரேக க்ரியைகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன. வெவ்வேறு வஸ்து சரீரங்களில் வெவ்வேறு கொள்கைகள் நடக்கின்றமையால் இதற்கு மேல் பார்வை இருப்பதாய் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே. இப்பார்வையைத்தான் எங்குமுள்ள (என்னோரமும்) ஓர் சக்தி யென்றே சொல்லவேண்டும். இச்சக்தியின் கட்டுப்பாட்டில், சூரிய, சந்திர நக்ஷத்திரங்கள் முதல் எல்லா உலக ராசிகளும் ஈடு பெற்றவைகளென்று சொல்லத் தடையில்லை. இச்சக்தியைத் தான் ஆன்மாவென்று கூறுகின்றோம். உபதேசம் பெற்றுள்ளோம். இயற்கை ஈசுவரன், காலர், விதி முதலிய பெயர்களால் அழைக்கப்படும் வஸ்து இவ்வான்மாவாக விருப்பதால் இதன் அங்கீகாரமாவச்யமன்றோ. ஆத்மா ஜங்கமங்களிலிருப்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஸ்தாவர விஷயத்தில் சந்தேகப்பட வேண்டியதே. குணக்ரியை விசேஷங்களினால் ஜங்கமங்களிலுயிரிருப்பதை அறிந்து கொள்வது போலவே ஸ்தாவரங்களிலும் கண்டறியலாம். முன்னால் சொல்லியிருப்பது போல் உலக வஸ்துக்களின் தோற்றத்திற்கும், நிலைமைக்கும், அழிவிற்கும் திரிதோஷங்கள் காரணமென்றும் இதுகளுடன் ஆன்மா சம்பந்தமிருப்பின் நிலைமை, இல்லாவிடின் நாசமென்றும் கூறியுள்ளோம். இவ்வான்மா அந்த அந்த திரேகசம்பந்தத்துடன்புண்யபாபங்களைச்செய்து வருவதின் பயனாக பின்ன பின்னமாக உருவப்படுகின்றது.

79. பஞ்சசூதம்—ரஸம் தோலா $2\frac{1}{4}$, லிங்கம் தோலா $4\frac{1}{2}$, பூரம் தோலா $5\frac{1}{2}$, வீரம் தோலா $1\frac{1}{4}$, ரஸசிந்தூரம் தோலா $3\frac{1}{2}$, இவைகளைப் பிள்ளைப்பாலால் 16 யாமம் அரைத்து உலர்த்தி பத்திரப்படுத்தி வேளைக்குக் குன்றியிடைதகுந்த அனுபானத்தில் கொள்ள வெடிமேகம், திமிர் புண்கள், குஷ்டம், கிரந்தி, அஷ்ட ஜன்னி, குன்மம், சுவாஸகாஸம், வாதம், சூலைநோய்கள், விப்புருதி, பக்ஷவாதம், புத்து. தொடைவாழை, முதலியன நீங்கும். குறிப்பு—தேரையர் கரிசல் 300ல் இம்முறை சொல்லப்பட்டுள்ளது.

80. தங்கசிந்தூரம்—சீனம் 25 பலம், வெடியுப்பு பலம் 10, இவை இரண்டையும் இடித்து ஓர் மண் தோண்டியில் இட்டு வாலையந்திரம் சொருகி அடுப்பேற்றி எரித்து திராவகம் எடுக்கவும். இத்திராவகத்தில் ஆரம்பத்தில் இறங்கும் திராவகநீரைத் தள்ளிப் பிந்தி மஞ்சள் நிறமாக வரும் நீரை எடுத்துப் பத்திரப்படுத்தவும். இது வெடியுப்புத் திராவகம் எனப்படும். ஓர் தோலா ரசத்தைப் பீங்கானிலிட்டு ஷை திராவகத்தை முழுகும்படி ஊற்றிக் கடும் வெய்யிலில் வைக்க ரஸம் பூத்து உப்பாக நீறிவிடும். மீதி ரஸம் இருந்தால் முன்போல திராவகம் ஊற்றி ரஸம் முழுவதும் பூத்து உப்பாகும்படி இவ்விதம் செய்யவும். பிறகு அந்த ரஸ உப்பு எடைக்குச் சமமிடைத் தங்கரேக்கு சேர்த்து இரண்டையும் கல்வத்திலிட்டு 12 யாமம் அரைத்து உருட்டிமேல் வெற்றிலை கொண்டு எலுமிச்சம்பழவளவு சுற்றி ஓர் சட்டியில் பாதி பெருமணல் கொட்டி அதன்மேல் ஷை உருண்டையை வைத்து மேலும் பெரும் மணலால் மூடி ஷை சட்டியின் மேல் ஏரு அடுக்கி லகு புடமாக இட்டு ஆறவிட்டு எடுக்கத் தங்கம் போல நிறத்துடன் அதாவது மஞ்சள் நிறமான சிந்தூரமாகும். வேளைக்குக் குன்றி யிடை தகுந்த அனுபானங்களில் கொடுக்கக் கல்பமாகும். சரீரம் மினுமினுக்கும். பாலும் சாதம் பத்தியமாகக் கொண்டு மண்டலம் கொள்ள க்ஷயம் முதலிய நோய் தீரும். குறிப்பு—இந்த முறை யூகிமுனி கரிசல் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

81. காளமேகநாராயணச்சிந்தூரம்—கரியுப்பு, வெடியுப்பு, படிகாரம், (சீனிக்காரம்) உவர் உப்பு, (பூநீர்) கந்தகம், வெங்காரம்,

கடல்நுரை, இவை வகைக்குத் தோலா பத்து எடுத்து ஒன்று சேர்த்துச் சாராயம் கொண்டு பிசிரி உலர்த்தி முன்போல வாலையிலிட்டுத் திராவகம் வடிக்கவும் ரஸம் முப்பது விராகனிடை, லிங்கம் விராகனிடை 15, ஹரிதாரம் விராகனிடை 10, கந்தகம் விராகனிடை 12, மனோசிலை விராகனிடை நான்கு, இவைகளைக் கல்வத்திலிட்டு ஷை திராவகத்தால் நான்கு யாமம் (12 மணி) அரைத்து உலர்த்திச் சட்டியிலிட்டு வாய் மூடிச் சீலமண் செய்து வாலுகாயந்திரத்தில் வைத்து அடுப்பேற்றி கமலாக்னியாக ஆறு மணி காடாக்னியாக 12 மணியும் எரித்து ஆறவிட்டு எடுக்க அருணன் போல சிந்தூரமாகும். குன்றியிடைச் சிந்தூரத்தை தூதுவளை, கண்டங்கத்திரி, இண்டு, இவைகளின் ரசத்தில் திரிகடு சூர்ணமும் கொஞ்சம் தேனும் சேர்த்து அநுபானமாக இருபது நாள் கொள்ள மந்தாரகாசம், ஈளை, எலிக்கடி, சுவாசகாசம், க்ஷயம், உப்பிசம், முதலியன நீங்கும். ஜன்னி மூர்ச்சை முதலியன விலகும். திப்பிலிப்பொடி அநுபானத்தில் சாப்பிட சூலை 18ம் விலகும். குஷ்டம், குறைநோய், கடிவிஷம், அரையாப்பு, ரணம், புற்று, கபாலசூலை, கண்நோய், பீனசம், நெஞ்சுவலி, காதிற்சீ, காது அடைப்பு, காது மடல் வீக்கம், போகும். உள்ளியின் அநுபானத்தில் கொள்ள வாத மூர்ச்சை, பித்தமூர்ச்சை, சிலேஷ்ம மூர்ச்சை, தீரும். அத்புதவாதம், தீரும். ஜன்னி 13ம் விலகும். ஓமம், சுக்கு, மிளகு, இவைகளைப் பொடிசெய்து இந்தப் பொடியை முருங்கைப்பட்டை ரசத்தில் சேர்த்து அநுபானமாகக் கொள்ள ஜன்னிவாதம், சர்வாங்கவாதம், பக்ஷவாதம், தோல் வாதம், எரிவாதம், நடுக்குவாதம், துடிப்புவாதம், கால்கைப்பிடிப்பு வாதம், நரித்தலைவாதம், கெண்டை வாதம், முகவாதம், பித்த நடுக்கம், சிலேஷ்ம நடுக்கம், முதலியவை தீரும். நிலவாகைச் சாற்றில் ஒன்று விட்டு ஒரு நாள் சாப்பிட தசநாடி ரோகங்கள், கர்ப்பவிப்புருதி, மூலம், அண்டவாயு, விதைவாதம், தீரும். குறிப்பு—இம்முறை தேரையர் கரிசலில் காணப்படுகின்றது.

82 வெள்வங்கபஸ்மம்—வெள்வங்கம் பலம் நான்கு, எடுத்து உருக்கிப் பிறகு காடி, மோர், கொள்ளு கஷாயம்,

கற்றாழை ரஸம், கோமயம், நல்லெண்ணை, இவைகளில் ஒவ்வொன்றிலும் ஏழு தடவை சாய்க்கவும். சுத்தியாகும். அதை அடித்து அரையணுப் பருமனாகத் தகடு தட்டிப் பிறகு தாளகம், வீரம், வகைக்கு 40 குன்றியிடை எடுத்து இரண்டையும் ஜலத்தால் அரைத்து அந்த விழுதை ஷை தகட்டின் இரு பக்கங்களிலும் தடவிக் காயவைத்து பின் ஓர் பழைய சாக்கில் வெள்ளாட்டுச் சாணி ஓமம் வகைக்கு எட்டு பலம் எடுத்து இடித்துப் பொடி செய்து அந்தப்பொடியில் பாதியைப் பரப்பி நடுவில் தகட்டை வைத்துத் தகட்டின் மேல் பாதிப்பொடியைப் பரப்பி சாக்கைச் சுற்றி சீலைமண் செய்து காயவைத்து முழப்புடம் புடமிட்டு ஆற விட்டு எடுக்கப் பூத்துப் பஸ்மமாகும். பணவிடை தகுந்த அனுபானங்களில் சாப்பிட பிரமேஹங்கள், மேகவெள்ளை, ரக்தமூலம், இவை நீங்கும். இவ்விதமே காரீயத்தையும் பஸ்மம் செய்து கொள்ளலாம்.

83. வெள்ளிபஸ்மம்—வெள்ளி எட்டு தோலா, வெள்ளீயம் ஒரு தோலா எடுத்து வெள்ளியை உருக்கி உருக்கு முகத்தில் ஷை வெள்ளீயத்தைக் கொடுக்க இரண்டும் சேர்ந்து வெட்டையாகும். அதைக் கல்வத்திலிட்டு அரைத்துச் சமயிடை ரஸம் சேர்த்து முன் சொன்ன வெடியுப்புத் திராவகத்தால் அரைத்து பில்லைசெய்துகுக்குடபுடமிடவும் இவ்விதம் மூன்று தடவை புடமிடப்பஸ்மமாகும். அச்வகந்தாதி சூர்ணத்தை அனுபானமாகக் கொண்டு சாப்பிட பித்தப்பிரமை, விஷூசிகா, காமாலை, கிராஹணி, க்ஷயம், க்ஷயகாசம், சுரமாந்தை, மேகம், எலும்புருக்கி, அஸ்திசுரம், பித்தவெட்டை, தீராத வெட்டைகள், ஆகிய இவை தீரும்.

84. வெங்கலபஸ்மம்—வெங்கலம், தரா (காரீயமும் செம்பும் சேர்ந்தது. இது சாதாரணமாகக் கிடைக்கும்) பித்தளை இவைகளைத் தனித்தனியாகத் தோலா எடுத்து அதோடு சுவர்ண மாக்ஷிகம் தோலா எடுத்துச் சேர்த்து வீரம் அரைத்தோலாசேர்த்து முன் சொன்ன வெடியுப்புத் திராவகத்தால் அரைத்து முழப்புடமிட பஸ்மமாகும். தகுந்த அனுபானங்களில் பணவிடை கொடுக்க

சிரநோய் மண்டையைப் பற்றிய நோய், கண்களைப் பற்றிய நோய், செவி நோய், தொண்டை நோய், அண்டநோய், பல் ஈறல்நோய், உதடு நோய், கன்னங்களில் காணும் நோய், மார்பு நோய், வயிற்று நோய், மூலநோய் தீரும்.

85. **உருக்குடஸ்மம்**—உருக்குப் பொடியை தாதுவளைச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும். ஷை சுத்தியான பொடிக்குப் பத்தில் ஒரு இடை வீரமும் வெள்ளைப்பாஷாணமும் சேர்த்து ஷை வெடியுப்புத் திராவகத்தால் அரைத்துக் காயவைத்து அகலில் இட்டுச் சீலைமண் செய்து புடமிட பஸ்மமாகும். மகோதரம், பாண்டு, முதலியன தகுந்த அனுபானங்களில் தீரும்.

86. **தங்கடஸ்மம்**—சூதம் தோலா 1, தங்கம் தோலா 2, இரண்டையும் சேர்த்து அரைத்துப் பிறகு கந்தகம் தோலா 2 சேர்த்துப் பிறகு ஷை வெடியுப்புத் திராவகத்தால் அரைத்துப் பில்லை தட்டிப் புடமிடவும். மறுபடியும் ஷை திராவகத்தால் அரைத்து (ரஸப், கந்தகம் சேர்த்து) பில்லைதட்டி இவ்விதம் ஐந்து புடமிடவும். நல்ல சிந்தூரமாகும் தகுந்த அனுபானங்களில் சாப்பிட சோகை, காமாலை, பாண்டு, குறை நோய்கள், ரக்தக்ஷயம், பித்தக்ஷயம், குடற்கரம், காசம், எரிகுன்மம், முதலியன விலகும். கல்பமாகும்.

87. **லவணபஸ்மம்**—இந்துப்பு பலம் 1, கல்லுப்பு பலம் 1½ இவைகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தை ரஸம், கள்ளிப்பால், குப்பைமேனி ரஸம், எருக்கம்பால், இவைகளால் அரைத்துப் பில்லை தட்டிக் காயவைத்து சட்டியிலிட்டு மூடி சீலைமண் செய்து லகு புடமிட பஸ்மமாகும். இவ்விதமே பஞ்சலவணத்தையும் பஸ்மம் செய்யலாம். தகுந்த அனுபானங்களில் கொள்ள குன்மம் முதலியன நீங்கும்.

88. **ஜயரஸம்**—தங்கம் தோலா 1, ஹரிதாரம் தோலா 8, சிறுகண்நாகம் தோலா 8, எடுத்து தங்கத்தை முதலில் உருக்கி அதில் நாகத்தைக் கொடுக்க வெட்டையாகும். அதைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து தாளகத்தைச் சேர்த்துப் பிறகு வீரம்

விராகனிடை 1, மனோசிலை விராகனிடை 1, சேர்த்துச் செம்பரத் தம்பூச்சாற்றால் அரைத்து உலர்த்திப் பொடிசெய்து குப்பியிலிட்டு வாய்மூடி சீலை செய்து வாலுகாயந்திரத்தில் 90நாழிகைமுத்தீயாகக் கைவிடாமல் எரித்து ஆறவிட்டு எடுக்க அருணன் போல் சிந்தூரமாகும். ஏலாதி, அசுவகந்தாதி, திராக்ஷாதி, பால், நெய், தேன், இந்த அனுபானங்களில் கொள்ளவும். பின்னும் அஷ்டசூர்ணம், திரிபலை,செங்கருப்பம்சார், சீனி, தாம்பூலச்சார், இந்த அனுபானங்களில் கொள்ளவும். தேகம் சுவர்ணமாகும். யானையைப் போல பலமுண்டாகும். நல்லபசி, வீரியவிருத்தி, உண்டாம்.காயம் இறுகும். வயது பெருகும்.

89. தாமிரபஸ்மம்—தாமிரத்தகடு ஒரு தோலா, வெள்வங்கம் தோலா 1, ஸ்வர்ணமாக்ஷிகம் தோலா1,இவற்றில்வெள்வங்கத்தை ஓர் இரும்பு வாணலியில் போட்டு அடுப்பேற்றி உருக்கி அதில் மாக்ஷிகப்பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு வறுத்து வர அது பஸ்மமாகும். ஷை பஸ்மத்தை எடுத்து அதன் இடையில் நான்கில் ஒரு பாகம் வீரம் சேர்த்து (எருக்கம்பாலில் அண்ட வெள்ளைக்கருவிட்டு மூன்று நாள் வைக்க எருக்கம்பால் முறிந்து நீராக நிற்கும்.) இந்த நீரால் அரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்துப் பின் குக்குடபுடமிட்டு ஆறவிட்டு எடுக்கவெளுத்துப் பஸ்மமாகும் ஷை பஸ்மத்தைத் தாமிர எடைக்குச் சமமெடுத்து பஸ்மத்தின் இடைக்கு நான்கில் ஒரு பாகம் வீரம் சேர்த்து ஷை நீரால் அரைத்து ஷை விழுதால் தாமிரத்தின் இரு புறத்திலும் பூசி ஓர் அகலில் காயவைத்து மேல் அகல் மூடி சீலைமண் செய்து காய்வைத்து முழப்புடமிட்டு எடுக்க தாமிரதரு பஸ்மமாகும். இதனால் குன்மரோகங்கள், ஆரம்ப குஷ்டரோகங்கள், இளைப்பு ரோகங்கள், மேகரோகங்கள், முதலியன தீரும்.

90. சீதஜ்வரக்குளிகை—மயில்துத்தம் பலம் 1, காளகம் பலம் 2, கல்சுண்ணாம் பலம் 4, இவைகளை வாழைத்தண்டின் சாற்றாலரைத்து பில்லைதட்டி குகையிலிட்டு சீலைமண் செய்து குக்குடபுடமிட்டு எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு துளசிரஸத்தால் அரைத்து மிளகு போல மாத்திரை செய்து இஞ்சிச்சார்

அனுபானத்தில் சாப்பிட சீதஜ்வரம்,குளிர்சுரம்,விடாசுரம்,விலகும். (அகஸ்தியர் வைத்திய காவியம் 600.)

91. **துத்தக்குளிகை**—பால்துத்தம் தோலா 5, பாதரஸம் தோலா 1, மயில்துத்தம் தோலா 1, நாபிக்கிழங்கு முக்கால் தோலா, தாளகம் தோலா 1, இவைகளைப்பாகலிலைச்சாற்றாலரைத்து பாசிப்பயாளவு உருண்டை செய்து காயவைத்து விஷ்ணுகிராந்தி கஷாயத்தின் அனுபானத்தில் கொள்ள சகல ஜ்வரங்களும் போம்.

92. **சிவநாமரஸம்**—ரஸம், கந்தகம், நாபிக்கிழங்கு,மனோசிலை, வெங்காரம், வகைக்கு விராகனிடை 1, மிளகு விராகனிடை 8, இவைகளைப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து வெற்றிலையில் பணவிடை கொள்ள க்ஷயம், காசம், பித்தம், காய்ச்சல், இவை தீரும்.

93. **துத்தக்குளிகை**—மயில்துத்தம் விராகனிடை பத்து, வெள்ளைப்பாஷாணம் விராகனிடை நான்கு, இவைகளைச் சுத்தி செய்து பிறகு ஊமத்தம்சார், எருக்கம்சார், இவைகளால் ஒவ்வொரு நாள் அரைத்துப் உளுந்து பிரமாணம் மாத்திரை செய்து பசும்பால் அனுபானத்தில் கொள்ள சகல காய்ச்சல்களும் தீரும்.

94. **லிங்கக்குளிகை**—லிங்கம் தோலா 1,வெள்ளைப்பாஷாணம் தோலா இவைகளை ஊமத்தம் சாற்றால் அரைத்துப் பிறகு இஞ்சி ரஸத்தால் அரைத்து உளுந்துபோல மாத்திரை உருட்டி தகுந்த அனுபானத்தில் கொள்ள சகல காய்ச்சல்களும் தீரும்.

95. **சூதராக்ஷஸம்**—தாமிரப்பொடி விராகனிடை 8, கந்தி 2, ரஸம் 1, மனோசிலை விராகனிடை 3, ஹரிதாரம் விராகனிடை 4, வத்ஸநாபி விராகனிடை 2, இவைகளைக் கல்வத்திலிட்டு கரிப்பான் சாற்றாலும் நொச்சி ரஸத்தாலும் இரண்டு நாள் அரைத்துக் குன்றிப் பிரமாணம் மாத்திரை செய்து திரிகடுப்பொடி, தேன், இந்த அனுபானத்தில் சாப்பிட மகோதரம், பஞ்சக்ஷயம், கவுசை, பஞ்சகுன்மம், இவை தீரும். (அகஸ்தியர் வைத்திய காவியம் 600.)

96. **திரிலோகச்சிந்தூரம்**—அரப்பொடி விராகனிடை 10,

தாமிரப்பொடி விராகனிடை 10, காந்தம் விராகனிடை 10, ரஸம் விராகனிடை $2\frac{1}{2}$, கந்தகம் விராகனிடை 5, இவைகளைக் கரிப்பான் ரஸத்தால் அரைத்து, பில்லைதட்டி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலைமண் செய்து எட்டு யாமம் எரித்து எடுக்கவும். சிந்தூர மாகும். காமாலை, பெருவயிறு, சோகை, சோபம், ஜலக்கழிச்சல், ஈழை, இருமல், இவை தீரும்.

97. லோகபஸ்மம்—ரஸம் பலம் 1, அரப்பொடி பலம் $1\frac{1}{2}$, கந்தகம் பலம் 1, வெங்காரம் பலம் அரை, காந்தம் கழஞ்சு 3, இவைகளைக் குப்பைமேனிச் சாற்றால் அரைத்து அடை தட்டிக் காயவைத்து ஓர் சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து இரண்டு யாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கச் சிந்தூரமாகும். வாந்தி, வெடிசூலை, பாண்டு, அஜீர்ணம், இவை தகுந்த அனுபானங் களில் விலகும்.

98. வெள்ளிபஸ்மம்—வெள்ளி தோலா 3, கந்தகம், ரஸம், வகைக்கு ஐந்து கழஞ்சி, இந்த இரண்டு சரக்குகளையும் எலுமிச்சம் பழ ரஸத்தால் ஆட்டி வெள்ளித் தகட்டிற்கு இருபுறமும் பூசி நன்றாகக் காயவைத்து ஓர் சட்டியில் அரசம்பட்டை சாம்பல் பாதி சட்டி கொட்டி அதன் மேல்வெள்ளித்தகட்டைவைத்து அதன்மேல் சட்டி நிறைய பொடி சாம்பலைப் போட்டு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து கஜபுடமிட்டு ஆறவிட்டு எடுக்க பஸ்மமாகும். வெள்வங்க பஸ்மமும் இதே முறைப்படி செய்யலாம்.

99. கருவங்கபஸ்மம்—கருவங்கம் பலம் 4, எள்ளு சின்னப் படி 2, கருவங்கத்தை உருக்கி அதில் எள்ளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு வறுத்து வர பஸ்மமாகும். பின் அதை எடுத்துக் கல்வத்திலிட்டு குருக்கு ரஸம் (இதுவே பிரம்மதண்டி எனப்படும்) விட்டு அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து அகலில் இட்டு சீலைமண் செய்து முழப்புடமிட பஸ்மமாகும். பிரமேஹம் முதலிய ரோகங்கள் தீரும்.

100. கந்தகபஸ்மம்—சுத்திசெய்த நெல்லிக்காய் கந்தகம் பலம் 4, வெங்காயச்சார் விட்டு மூன்று நாள் அரைத்துப் பிறகு

முள்ளங்கிச் சாற்றால் மூன்று நாள் அரைத்துவெய்யிலில் வைத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும். தேன் முதலிய அநுபானங்களில் கொள்ள கிராஹணீ, கிரந்தி, சூலை, படைமேகம், முதலியவை தீரும். தாதுவிருத்தி யுண்டாம்.

101. நாகசிந்தூரம் — இலுப்ப எண்ணெயில் 21 தடவை காய்ச்சித் தோய்த்த சிறுகண்நாகம் பலம் 4, சுக்கு பலம் 1, ஓமம் அரைப்பலம், மஞ்சள் ஒரு பலம், வெடியுப்பு பலம் 4, இவைகளை இடித்துப் பொடி செய்து ஷை நாகத்தை உருக்கி கண் விட்டாடும் பொழுது ஷை தூளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி நாயுருவி சமூலத்தை ஓர் கத்தையாகக் கட்டி அதால் வறுத்து வரச் சிந்தூரமாகும். திரிகடு அநுபானத்தில் ஈழை, இருமல், காசம், சுவாசம், சிலேஷ்மநோய், கர்ப்பச்சூடு, வெள்ளை முதலியன விலகும்.

102. சுயமக்னி—ரஸம் தோலா 4, மனோசிலை தோலா 2, கந்தகம் தோலா 8, காந்தம் தோலா 16, அரப்பொடி தோலா 32, இவைகளைக் குமரிச்சாற்றால் அரைத்து வெங்கலப்பாத்திரத்தில் அப்பிவைக்கத் தணல் போல் ஆகி அமரும். குன்றியிடை தகுந்த அநுபானத்தில் கொடுக்க அஜீர்ணம், குளிர் சுரம் முதலியன தீரும்.

103. பூரபஸ்மம்—பூரம் பலம் 1, பொரித்த சீனிக்காரம் பலம் 4, இவை இரண்டையும் கல்வத்திலிட்டுக் குமரிரஸத்தால் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓர் சட்டியில் வைத்து மேல் சட்டி மூடி சீலைமண் செய்து நான்கு யாமம் (12 மணி) எரித்து எடுக்கப் பூரம் சட்டியில் மேல் பதங்கித்திருக்கும். அரை முதல்ஒரு குன்றியிடை வரையில் தேன் முதலிய அநுபானங்களில் கொடுக்க சூலை, பவுந்திரம், மேகரோகங்கள், தீரும். (யூகிமுனி வைத்திய விளக்கம்)

104. அயவீரசிந்தூரம்—அயம் பலம் 1, வீரம் பலம் 1, ரஸம் பலம் 1, நவாச்சாரம் பலம் 1, லிங்கம் பலம் 1, இவைகளைக் குமரி ரஸம் விட்டரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓர் சட்டியில் குமரிச்சார் விட்டு அதன் மேல் ஷை பில்லையை வைத்து மேலும் குமரிச் சோற்றால் மூடி மேல் சட்டி மூடி சீலைமண் செய்து 12

வடிகட்டி அதில் பசுநெய் சின்னப்படி இரண்டு சேர்த்து திரிபலை வகைக்குத்தோலா 11 இடித்துப் பொடிசெய்து போட்டுக் கிருத பதமாகக் காய்ச்சி வடிகட்டி தினம் காலையில் அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு வரை சாப்பிடவும். குறிப்பு—ஆடாதோடையின் வேரை உபயோகிப்பது தான் முறை. சிலர் தழையையும் உபயோகிக்கின்றனர்.

205. **தாளகேசுவரம்**—தகரைவேர், முட்காய்வேளைவேர், இவைகளைக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தால் தாளகத்தை (தாளக சுத்தியைச் சித்தர் முறையில் காண்க)ப் பல தடவை அரைத்து வெய்யிலில் உலர்த்திஓர்சட்டியில்புரசம்பட்டைச் சாம்பலைப் பாதி யடைத்து அதன் நடுவில் தாளக அடையை வைத்து மேலும் சட்டி நிறைய புரசம் சாம்பலைக் கொட்டி 24 மணி எரித்து ஆறவிட்டு எடுக்கத் தாளகபஸ்மமாகும். அரிசியிடை உபயோகிக்கவும்.

206. **மஹாதாளகேசுவரம்**—பத்ரதாளகத்தைச் சுத்திசெய்து பிறகு சாம்பல் பூசணிரஸம், குமரிரஸம், காடி, தயிர், வெள்ளைச் சாரணத்தி கஷாயம், இவைகளில் வரிசையாக மூன்று மூன்று நாள் பாவனை செய்து ஒரே அடையாகத் தட்டி வெய்யிலில் காய வைத்துப் பிறகு ஓர் சட்டியில் பாதி வரை புரசம்சாம்பல் போட்டு அதன் நடுவில் மேற்படி அடையை வைத்து அதற்குமேல் சட்டி நிறைய புரசம்சாம்பலைக் கொட்டி மேல் சட்டி மூடி வாய்க்குச் சீலைமண் செய்து நான்கு நாள் இடைவிடாமல் அடுப்பேற்றி எரித்து ஆற விட்டு எடுத்துப் பிறகு சமயிடை கந்தகம், கந்தகத்திற்கு இரு மடங்கு தாமிரபஸ்மம் சேர்த்து ஓர் குப்பியிலிட்டு வாய் மூடி சீலை செய்து வாலுகாயந்திரத்தில் ஒரு நாள் எரித்து ஆறவிட்டு எடுத்து மூன்று அரிசியிடை வரையில் உபயோகிக்கவும்.

207. **பஞ்சதிக்தகுக்கலுகிருதம்**-வேப்பம்பட்டை,சிந்தில்கொடி, ஆடாதோடை, பேப்புடல், கண்டங்கத்திரிவேர், இவை வகைக்குத் தோலா40 இடித்து ஜலம் சின்னப்படி 32 சேர்த்து அடுப்பேற்றி 8 படியாகவற்றவைத்து வடிகட்டி அதில் பசுநெய் சின்னப்படி இரண்டு

விட்டு அதில் மலைதாங்கிவேர், வாய்விளங்கம், தேவதாரு, யானைத் திப்பிலி, யவக்ஷாரம், சத்திக்ஷாரம், சுக்கு, சதகுப்பை, செவ்வியம், கோஷ்டம், வாலுளுவையரிசி, மிளகு, வெப்பாலையரிசி, ஓமம், கொடுவேலி, கடுகுரோகிணி, சேங்கொட்டை, வசம்பு, தேசாவரம், மஞ்சிஷ்டி, அதிவிடயம், திரிபலை, ஜீரகம், இவை வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து போட்டு குக்கில் தோலா இருபதும் சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சி வடிகட்டி தினம் காலையில் அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு வரை உபயோகிக்கவும். குறிப்பு— சேங்கொட்டையை மாத்திரம் தனியாகக்கல்வத்திலிட்டு ஜாக்கிரதையாக அரைத்துப் போடவும். மற்ற சரக்குகளை ஒன்று சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து போடவும். குக்கிலை அளவுப்படி எடுத்து ஓர் துணியில் மூட்டை கட்டி கஷாய சாமான்களுடன் சேர்த்துக் கஷாயம் செய்து பிறகு அந்த மூட்டையை எடுத்து உள்ளிருக்கும் குக்கிலைக் கல்வத்திலிட்டு அரைத்து நெய்யில் கல்க சாமான்களுடன் சேர்த்துப் போடவும். நூல்களில் இவ்விதம் இருந்த போதிலும் குக்கிலைத் தனியாக எடுத்து கல் குச்சி முதலியவை நீக்கிப் பிறகு ஓர் பாத்திரத்திலிட்டு அது முழுதும்படி வென்னீர் விட்டு ஊறவைத்துப் பிறகு அந்த வென்னீரால் அரைத்துச் சேர்ப்பது நமது வாடிக்கை. இவ்விதம் ஊறவைப்பதற்கு முந்தியே குக்கிலை நன்றாகப் பொடிசெய்து கொள்ளவேண்டும் கடைச்சரக்கில் பல கோளாறுகள் இருக்கின்றன. ஆகவே நல்ல சரக்காக வாங்கி அதைக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடி செய்யும்பொழுது அதிலுள்ள கல், குச்சி, இவைகளை நீக்கிவிட வேண்டும். பசையுள்ள வஸ்துவானதால் நன்றாகப் பொடி செய்ய முடியாது. இந்த மருந்து மிகவும் உயர்ந்தது. இது வாக்படரால் கூறப்பட்டுள்ளது. அகஸ்தியர் ஆயுர்வேதத்திலும் இது காணப்படுகின்றது. கடுமையான கேசுகளில் தினம் இரண்டு அவுன்சு கொடுப்பது நமது வாடிக்கை. சில சரீரங்களில் இது மலப்பிரவிருத்தியை யுண்டுபண்ணுகின்றது. அந்த சரீரம் பார்த்து அளவைக் குறைத்துக் கொடுக்கவேண்டும். குஷ்டநோய், வாதநோய், இந்த இரண்டிலும் மிகுந்த நன்மை செய்கின்றது, குக்கில் அதிக அளவில் சாப்பிட்டால் பேதியாகும். கல்பச்சரக்கு

கள் முழுவதுமே பேதியாகும் குணமுடையது.

208. பல்லாதகலேஹியம்—வேப்பம்பட்டை, நன்னாரி, மஞ்சிஷ்டி, கடுகுரோகிணீ, மருக்கொன்னை, திரிபலை, கோரைக்கிழங்கு, பர்பாடகம், கார்போகவரிசி, மாகாளி, வசம்பு, கருங்காலி, சிகப்புச் சந்தனம், மலைதாங்கி, சுக்கு, பூலாங்கிழங்கு, சிறுதேக்கு, ஆடாதோடைவேர், நிலவேப்பு, வெப்பாலையரிசி, விருத்ததாரகம், பேய்க்கொம்மட்டிவேர், மருள்கிழங்கு, வாய்விளங்கம், அதிவிடயம், கொடுவேலி, ஹஸ்திகர்ணம், சீந்தில், பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி, கொன்னைவேர், எழிலைப்பாலை, வாகைவேர், குன்றுமணி, லாங்கலீ, அரத்தை, புன்கை, வெள்ளைச்சாரணத்தி, தந்திவேர், வேங்கை, கரிப்பான், மருதோன்றி, இவை வகைக்குத் தோலா 8 இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு நான்கு படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். சேங்கொட்டை ஆயிரம் எடுத்து இரண்டாக நறுக்கி ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு எட்டு படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி முன் கஷாயத்துடன் சேர்த்து சர்க்கரை தோலா 400 சேர்த்து ஆயிரம் சேங்கொட்டையை நன்றாக அரைத்துச் சேர்த்து அதில் திரிகடு, திரிபலை, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கொடுவேலி, சந்தனம், இந்துப்பு, கோஷ்டம், ஓமம், வகைக்குத் தோலா நான்கு, சதுர்ஜாதம் வகைக்குத் தோலா ஒன்று, இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டுநன்றாகக் கிளரி லேகிய பதத்தில் கீழேஇறக்கி அதில் சுத்தம்செய்த கந்தகம் தோலா 16 பொடி செய்து போட்டு கலந்து பத்திரப்படுத்தி வேளை ஒன்றுக்கு அரைத்தோலா வரையில் இருவேளை உட்கொள்ளவும். புளி நீக்கி பத்தியம் கொள்ளவும்.

குறிப்பு—கஷாயத்தில் மொத்தச் சரக்கு 46. இவற்றுள் கோரைக்கிழங்கு, மஞ்சிஷ்டி, இந்த இரண்டு சரக்குகளையும் வகைக்குத் தோலா 16 எடுத்துக் கொள்ளவும். ஹஸ்திகர்ணீ என்பது புரசில் ஓர் பேதம். லாங்கலீ என்பது இவ்விடத்தில் குப்பைமேனியாகும். குன்றுமணி விதையை எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த

லேகியத்திற்கு தேன், நெய், சேருவதில்லை. ஆகையால் ரஸாயன பாகம் போல் செய்து கொள்ளவேண்டும். சேங்கொட்டை கஷாயத்திலும் கல்கத்திலும் சேருகின்றது. நல்ல பளுவான சேங்கொட்டைகளைப் பொறுக்கிக் கொள்ளவேண்டும். ஓர் கொப்பரையில் தண்ணீர் கொட்டி அதில் சேங்கொட்டைகளைப் போட்டால் ஜலத்தில் அமிழ்ந்திருக்கும் கொட்டைகள் பளுவானவை. நீர்மேல் மிதப்பவை இலேசானவை. ஆகவே மிதப்பவைகளை விலக்கிவிட வேண்டும். கஷாயத்தில் சேரும் கொட்டைகளை இரண்டாக நறுக்கவேண்டும். கல்கத்தில் சேரும் கொட்டைகளை நன்றாக அரைக்க வேண்டும். சேங்கொட்டைகளை எவ்வளவு அரைத்த போதிலும் அது நன்றாக அரைபடுவதில்லை. கூடிய மட்டில் அரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும். சேங்கொட்டைப் பால் மேலே படுமாகில் உடனே புண் ஆவதுடன் சரீரமும் வீங்கிவிடும். ஆகவே இம்மருந்தை ஜாக்கிரதையாகத் தயார் செய்யவும். சேங்கொட்டையின் துர்குணம் நீங்கவேண்டுமானால் வாய்விளங்கம் சேர வேண்டும். வடமொழி நூல்களில் சேங்கொட்டை சேருமிடங்களிலெல்லாம் வாய்விளங்கமும் சேர்ந்திருக்கும். வாய்விளங்கம் சேர்ந்து விட்டால் அம்மருந்துகளைக் கூசாமல் உபயோகிக்கலாம். அம்மருந்து தயாரிக்கும் பொழுது மேலே பட்டாலும் துர்குணம் செய்யாது. வாய்விளங்கம் சேராத மருந்துகளைத் தயாரிக்கும் பொழுதும் சாப்பிடும் பொழுதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சேங்கொட்டையின் துர்குணம் காணப்படுமாகில் உடனே வாய்விளங்கத்தைக் கஷாயமிட்டுச் சாப்பிடவேண்டும். வாய்விளங்க கஷாயத்தால் ஸ்நாநம் செய்யவேண்டும். இம்மருந்து சிலருக்கு துர்குணம் கொடுக்கின்றது. துர்குணங்களாவன— சரீரத்தில் மிகுந்த அரிப்பு, சொரிந்த இடங்களில் தடிப்பு, சரீரம் கனத்தல், தலைவலி, ஆகிய இவைகளே. இம்மருந்தையும் மற்றும் சேங்கொட்டை சேர்ந்த மருந்துகளையும் உபயோகிப்பதால் அனேகமாக எல்லோருக்குமே மூத்திரத்தின் அளவு குறைந்துவிடுகின்றது. துர்குணம் கண்டவுடன் முதலில் மருந்தை நிறுத்தவேண்டும்.

வைத்தியக்குறிப்புகள்.

மதுரை சுதேச வைத்திய ஸபா—ஷ்டி ஸபையின் ஆதரவில் ஏப்ரல்மீ 11௳ சனிக்கிழமை மாலை 5½ மணிக்கு காக்காத்தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் டாக்டர் V. சாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் ஓர் ஸம்மேளனம் நடைபெற்றது. அச்சமயம் சபைத்தலைவர் டாக்டர் V. M. **ராமசாமி சர்மா** அவர்கள் க்ஷயமும் அதன் சிகிச்சையும் என்பதைப்பற்றி விரிவான உபன்யாசம் செய்தார். பலரும் சர்ச்சையில் கலந்து கொண்டனர்.

மதுரை சுதேச வைத்திய ஸபா—ஷ்டி சபையின் ஆதரவில் ஏப்ரல்மீ 18௳ சனிக்கிழமை மாலை 5½ மணிக்கு காக்காத்தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் சபைத்தலைவர் C M. ராமசாமி சர்மா அவர்கள் தலைமையில் ஓர் ஸம்மேளனம் நடைபெற்றது. அச்சமயம் மதுரை டாக்டர் S. **வன்னியக்கோனர்** அவர்கள் சித்தர் முறை என்பதைப்பற்றி ஓர் உபன்யாசம் செய்தனர். பல வைத்தியர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

காரியதரிசி.

Registered No. M. 4018.

பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்களின்

ருதுசூல நிவாரணீ

இது கைகண்ட மருந்து. கருப்பையை (கர்ப்பாசயத்தை) ஒழுங்கு செய்து ஆரோக்ய நிலைமையில் வைப்பதுடன் மாவிடாய் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி அதிக ரத்தப் பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணமாக நிறுத்தி விடுகின்றது. மற்ற மருந்துகளால் அசாத்தியமெனத் தள்ளப்பட்ட பல ருது-நோய்களை நிவர்த்தி செய்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கின்றது.

உபயோகிக்கும்விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாயங் காலம் 1 மாத்திரை விதம் மாத்திரையை வாயில் போட்டு கொண்டு வென்னீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—அதிமாக வாயு பதார்த்தம் சேராமலிருப்பது நலம்.

ஒரு மாத மருந்து விலை ரூ. 10 தபால் செலவு வேறு.

விலாசம்—**பண்டிட் நாராயணய்யங்கார்**

நெ. 2. போலீஸ்ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

வெங்கடேஸ்வர் பிரஸ் காக்காத்தோப்புத்தெரு, மதுரை—42.